# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 31.01.2018 | 1)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி புல்தோட்டம் (தாமஸ் நகர்) அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 09.01.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு. A.Shanmuga Sundara Raja<br>மதிப்பீட்டை விட 0.28% அதிகம் (ரூ.4899421.00)<br>2. திரு. M.Malayandi Prabhu<br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.4883753.10)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. M.மலையாண்டி பிரபு அவர்களின் (மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.48,83,753.10)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்த திரு. M.Malayandi Prabhu ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E1/01158/2015 | 18)அலுவலகக் குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது |
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி ஜார்ஜ்ரோடு தருவை மைதானம் அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.43,00,000/–க்கு பணிக்கு 09.01.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. | 19)அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. திரு. A.Shanmuga Sundara Raja<br>மதிப்பீட்டை விட 0.29% அதிகம் (ரூ.4246583.20)<br>2. திரு. M.Malayandi Prabhu<br>மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.4232545.36)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. M.மலையாண்டி பிரபு அவர்களின் (மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.4232545.36)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>**1.**மேற்படி மதிப்பீடு தொகை ரூ.43.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br><br>**2.**பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**3.**மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்த திரு. M.Malayandi Prabhu ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்..<br><br>E1/01158/2015 | |
| | **3)** அரசு மற்றும் நகராட்சி மாநகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரித்தல் தொடர்பாக வரப்பெற்ற **1)** அரசு ஆணை (நிலை) எண்.**77** பள்ளிக் கல்வி (ப.க.**4** (I) த் துறை நாள் **13.04.2015**னையும் **2)** அரசு ஆணை (எம்.எஸ்) எண். **166** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்எIV) துறை நாள் **23.11.2016**னையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவு செய்திடவும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –**பதிவு செய்யலாம் எச்**3 / 250/2018** | **20)** பதிவு செய்யப்பட்டது. |
| | **4)** இம்மாநகராட்சியில் பொது சுகாதார பணிகளுக்கு வெளிகொணர்வு (Out sourcing) முறையில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களை பணியமர்த்திட மாநகராட்சி சார்பாக **29.12.2017** அன்று கோரப்பட்ட ஒப்பந்த புள்ளியினை எதிர்த்து நுகர்வோர் பாதுகாப்புக் கழகம், தூத்துக்குடி நிறுவனத் தலைவர் திரு.ராபின் சித்தரஞ்சன் என்பவர் சென்னை, உயர் நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD) No. 23418/2017 ல் மாநகராட்சிக்கு எதிராக இடைக்கால தடையாணை விதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கினை எதிர்த்து மாநகராட்சி சார்பாக எதிர் வழக்காட அவசரம் அவசியம் கருதி அரசு கூடுதல் வழக்கறிஞரை மன்ற அனுமதியினை எதிர் நோக்கி நியமித்தமைக்கும் அதற்கான செலவுத்தொகைகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** அனுமதிக்கலாம். எச்**1/2275/2017** | **21)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **5)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் முதிர்ந்த கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Malathion Grade 95% என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் அனுமதி பெற்ற M/s Shivalik Rasayan Limited நிறுவனத்தின் மூலம் ஒரு லிட்டர் ரூ **375/–** வீதம் **2000** லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து ஏற்பதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். **எச்2/7958/13** | **22)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 6)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – AMRUT 2017-18 திட்ட பணியில் தூத்துக்குடி ரோச் பூங்கா சீரமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ **86,78,000/–**க்கு பணிக்கு **08.01.2018** அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>3. திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 0.40% அதிகம் (ரூ.6948332.00)<br>4. திரு. S.Rambola<br>மதிப்பீட்டை விட 1.06% குறைவு (ரூ.7050432.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S.சுதர்சன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.40% குறைவு (ரூ.69.48.332.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.40% குறைவாக கொடுத்த திரு. S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E1/3262/2017 | **23)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக் கப்பட்டது. |
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – AMRUT 2017-18 திட்ட பணியில் தூத்துக்குடி சங்கரநாராயணன் பூங்கா சீரமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ **53,84,300/–**க்கு பணிக்கு **08.01.2018** அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>திரு. J. Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட **0.20**% குறைவு **(ரூ.4395171.80)**<br>**2.**திரு. S.Rambola<br>மதிப்பீட்டை விட **2.63**% அதிகம் **(ரூ.4519861.80)**<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. J.சுரேஷ் ஜெயக்குமார் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.20% குறைவு (ரூ.4395171.80)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது. | **24)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.20% குறைவாக கொடுத்த திரு. J.சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/3262/2017 | |
| | 8) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – AMRUT 2017-18 திட்ட பணியில் தூத்துக்குடி ஜார்ஜ் ரோடு புல்தோட்டம் பூங்கா சீரமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 1,16,37,000/–க்கு பணிக்கு 08.01.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>திரு. I. Jeyaseelan.<br>மதிப்பீட்டை விட 0.12% குறைவு (ரூ.8659274.00)<br>2.திரு. S.Innasimuthu<br>மதிப்பீட்டை விட 0.16% அதிகம் (ரூ.8683430.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. I. Jeyaseelan அவர்களின் (மதிப்பீட்டை விட 0.12% குறைவு (ரூ.8659274.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்த திரு. I. Jeyaseelan ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/3262/2017 | 25)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 9) இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்சமயம் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற காய்ச்சல் பரவுதலை தடுத்திடும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதனை கண்காணித்திடவும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டபடி கூடுதலாக துப்புரவு ஆய்வாளர்களை பிற நகராட்சியிலிருந்து மாற்றுப்பணியில் (Deputation) 05/01/2018 முதல் மறு உத்திரவு வரும் வரை பணிபுரிய தெரிவிக்கப் பட்டுள்ளது.<br>இதனை தொடர்ந்து இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை, சென்னை / இணை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை நோய் பரப்பிகள் மற்றும் நோய் கட்டுப்பாட்டு மையம், ஒசூர் / துணை இயக்குநர், பொது சுகாதாரப் பணிகள், தூத்துக்குடி ஆகியோர்களின் செயல்முறைகளின்படி புகை தெளிப்பான வாகனம், சுகாதார ஆய்வர்கள் மற்றும் களப்பணியாளர்களை மாற்றுப் பணியில் (Deputation) 17.01.2018 முதல் 31.01.2018 வரையில் பணிபுரிய தெரிவிக்கப்பட்டுள்ளது. | 26) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இக்களப்பணியாளர்களுக்கு பயணப்படி / தினப்படி (TA/DA) வாகனங்கள் மற்றும் புகை தெளிப்பான் இயந்திரங்களுக்கான எரிபொருள் அவசரம் அவசியம் கருதி தினசரி வார்டுகளுக்கு சென்று வர நாள் வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்று அமர்த்திக்கொள்ளவும் செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>எச்1/ 216/2018 | |
| | 10) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி சின்னமணி நகர் சிலோன் காலனி பகுதியில் பயோ காஸ் கம்யூனிட்டி கிச்சன் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 25,90,000/–க்கு பணிக்கு 28.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1) திரு. M/S Arumugam Arivu Bio Energy<br>மதிப்பீட்டை விட 6.12% அதிகம் (ரூ.2666517.11)<br><br>2.திரு. M/S Sundaram Fab Pvt,Ltd,<br>மதிப்பீட்டை விட 0.82% குறைவு (ரூ.2492152.46)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. M/S Sundaram Fab Pvt,Ltd, அவர்களின் (மதிப்பீட்டை விட 0.82% குறைவு (ரூ.2492152.46) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.82% குறைவாக கொடுத்த திரு. M/S Sundaram Fab Pvt,Ltd ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E1/02931/2016 | 27)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 11) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மாநகராட்சி வார்டு பகுதிகளில் 16 நுண் உரக்கிடங்கு மையம் அமைத்து டாடா ஏஸ் (TATA-ACE) இலகுரக வாகனம் சொந்தமாக வாங்க இருப்பதால் மேற்படி வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பணியிடம் அவசியம் தேவைபடுவதாலும் போதிய ஓட்டுநர்கள் இல்லாததாலும் இப்பணிகளுக்கு தேவையான 16 இலகுரக வாகன ஓட்டுநர்களை வெளிகொணர்வு (Outsourcing) முறையில் பணியமர்த்தி கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். எச்1/296/2018 | 28) அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **12)** தூத்துக்குடி மாவட்டத்தில் முதன் முறையாக புத்தக திருவிழா நடத்த மாவட்ட நிர்வாகம் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமும் தூத்துக்குடி மாநகராட்சியும் இணைந்து BAPASI சார்பில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள வளாகத்தில் அக்டோபர் **2** முதல் **11** வரை **10** நாட்கள் புத்தக திருவிழா நடைபெற்றது. திருவிழாவில் **106** அரங்குகள் அமைக்கப்பட்டு **70**க்கும் மேலான பதிப்பகத்தாரின் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தலைப்புகளிலான புத்தகங்கள் தினந்தோறும் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், பல துறை எழுத்தாளர்களின் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் என வெற்றிகரமாக நடத்தப்பட்டது.<br><br>திருவிழா வளாகத்தில் அரசு துறை சார்பாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு என ஒரு கடை வழங்கப்பட்டது. அதில் மாநகராட்சி பொது சுகாதார துறை மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்த பதாகைகள் வைக்கப்பட்டு பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சலை தடுக்கும் நிலவேம்பு கசாயம் தினந்தோறும் காலை முதல் மாலை வரை திருவிழா அரங்கிற்கு வரும் பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.<br><br>புத்தக திருவிழா வளாகத்தில் அரசு துறை சார்பாக மாநகராட்சிக்கு ஸ்டால்கள் வழங்கியதின் பேரில் தூத்துக்குடி மாநகராட்சி பங்கு தொகையாக ரூ.**1.00** லட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபடி மேற்படி தொகையினை தூத்துக்குடி மாவட்ட புத்தகத்திருவிழா குழு என்ற பெயருக்கு வழங்கவும் புத்தக கண்காட்சி நடைபெறுவது குறித்த பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்வதற்காக மாநகராட்சி பகுதியில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், பூங்காக்கள், பள்ளி கல்லூரிகள், சந்தைகள் ஆகியவற்றில் புத்தக கண்காட்சியில் நடைபெறும் தினசரி நிகழ்ச்சிகள் குறித்த விளம்பர பதாகைகள் வைத்தமைக்கான செலவுத் தொகை ரூ. **37128** ஆக மொத்த தொகை ரூ. **137128/-** மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். சி1/221/2018 | **29)** அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | **13)** தூத்துக்குடி மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மையை திறம்பட கையாளும் பொருட்டு நுண் உரக்கிடங்குகள் அமைத்து அதன் மூலம் நகரில் சுகாதார பணிகளை விரைவுபடுத்த முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் தலைமையில் **5**வது உயர்மட்டக்குழு கூட்ட நடவடிக்கை தீர்மானம் எண். **11**ல் அனுமதிக்கப்பட்டது.<br><br>இதனடிப்படையில் மொத்தம் **16** நுண் உர கிடங்குகளில் மூன்றாவது கட்டமாக **1)** W-3 மீளவிட்டான் **2 )** W – 38 அண்ணா நகர் **12**வது தெரு **3)** W – 40 பெருமாள்புரம் மற்றும் **4)** W -50 செல்சீனி காலனி ஆகிய **4** கிடங்குகளின் பயன்பாட்டிற்கு **16** எண்ணிக்கை **2.0** க.மீ. பாக்ஸ் டிம்பர் BS4 இலகுரக வாகனங்கள் தயாரிப்பு நிறுவனம் மூலம் அரசு மின் சந்தை வழியாக (GeM) வாங்குவதற்கும் இதற்கு ஆகும் செலவினம் ரூ **8960000/-** (**16** X **560000/-**) க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **30)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு<br><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) இப்பணியில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை போக ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ1/1158/2015–acc/3 | |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மையை திறம்பட கையாளும் பொருட்டு நுண் உரக்கிடங்குகள் அமைத்து அதன் மூலம் நகரில் சுகாதார பணிகளை விரைவுபடுத்த முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் தலைமையில் 5வது உயர்மட்டக்குழு கூட்ட நடவடிக்கை தீர்மானம் எண். 11ல் அனுமதிக்கப்பட்டது.<br><br>இதனடிப்படையில் மொத்தம் 16 நுண் உர கிடங்குகளில் இரண்டாவது கட்டமாக 1) W-6 அம்பேத்கார் நகர் 2 ) W – 18 மேட்டுப்பட்டி 3) W – 33 தாமஸ் நகர் மற்றும் 4) W -59 சவேரியார்புரம் ஆகிய 4 கிடங்குகளின் பயன்பாட்டிற்கு 16 எண்ணிக்கை 2.0 க.மீ. பாக்ஸ் டிம்பர் BS4 இலகுரக வாகனங்கள் தயாரிப்பு நிறுவனம் மூலம் அரசு மின் சந்தை வழியாக (GeM) வாங்குவதற்கும் இதற்கு ஆகும் செலவினம் ரூ 8960000/– (16 X 560000/–) க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) இப்பணியில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை போக ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ1/1158/2015–acc/2 | 31) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 15) இம்மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பணிபுரிந்து வந்த நகர்புற சுகாதார செவிலியர்கள் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றதாலும் பதவி உயர்வு பெற்றதாலும் ஏற்பட்ட 6 சுகாதார செவிலியர் பணியிடங்கள் நிரப்பபடாமல் காலியாக உள்ளது. திட்ட இயக்குநர் தேசிய சுகாதார திட்டம் மாநில சுகாதார சங்கம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 6939/NUHM/SHS/2015 நாள் 01.11.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி வெளிகொணர்வு (Outsourcing) முறையில் இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் நகர்புற சுகாதார செவிலியர் 14 நபர்கள் AMK MAN POWER SERVICE மூலம் பணியமர்த்தப் பட்டுள்ளார்கள். தற்சமயம் பொது சுகாதார பணிகள் பாதிக்காமலும் திறன்பட செயல்படுத்திட வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டும் 6 நகர்புற சுகாதார செவிலியர்களை AMK MAN POWER SERVICE மூலம் பணியமர்த்திக்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம். எச்1/325/2018 | 32) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **16)** தூத்துக்குடி மாநகரட்சி பராமரிப்பில் உள்ள மேற்கு மண்டல பகுதியில் **42**வது வார்டு பகுதியில் கணேஷ்நகர் முதல் வ.உ.சி கல்லூரி வரையிலான மாநகராட்சிக்கு சொந்தமான நல்ல தண்ணீர் கால்வாய் (Conduit Channel) அமைந்துள்ள பகதியில் முட்செடிகள் வளர்ந்து சுகாதாரமற்ற நிலையிலும், மேற்படி இடம் திறந்த வெளி கழிப்பிடமாகும் சூழ்நிலையிலும் உள்ளது. மேற்கண்ட பகுதியில் பதிக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் குடிநீர் குழாய் பம்பிங் மெயின்களான **1**வது **2**வது மற்றும் **3**வது குழாய்களில் பம்பிங் முழுவதும் நிறுத்தப்பட்டு மேற்படி குடிநீர் குழாய்கள் பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளது. மேலும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட **4**வது பைப்லைன் MS 1000mm குழாய் தரை மட்டத்திலிருந்து **1.20**மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட இடத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்கும் திட்டத்தின் அடிப்படையில் **4**வது குடிநீர் பம்பிங் மெயின் குழாய்களுக்கு எந்த வித சேதமும் ஏற்படாத வகையிலும் மேலும் குடிநீர் குழாய் பராமரிப்பதற்கு எவ்வித தடையின்றியும் மேற்படி பைப் லைன் அமைந்துள்ள இடத்தில் முற்றிலும் தற்காலிகமாக நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க **1920** வருடத்திய நகராட்சி விதி எண் **128**ன் படி மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/00218/2018/மே.ம. | **33)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்கடி மாநகராட்சி
நாள் **31.01.2018**